<u>DEPOSITION OF WITNESS</u>

(CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEEDINGS)

IN THE COURT OF THE III ADDITIONAL DISTRICT AND SESSIONS JUDGE, DHARAPURAM

SESSIONS CASE NO: 37/2022 Deposition of Witness for : P.W.9

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | செல்வன் | Caste | : | |
| Father's Name | : | | Calling | : | |
| Age | : | | Taluk | : | |
| Village | : | | District | : | |

Solemnly affirmed according with the provisions of Act XX of 1973 on the

day of 06.07.2023

<u>முதல் விசாரணை</u>

சத்தியமாக சொல்கிறேன். நான் தற்போது ஈரோடு மாவட்டம் தாளவாடி கிராமம் காவல்நிலையத்தில் வட்ட ஆய்வாளராக பணிபுரிகிறேன். கடந்த 17.10.2021ம் தேதி மூலனூர் காவல்நிலையத்தில் காவல் ஆய்வாளராக இருந்த தாராபுரம் காவல்நிலைய ஆய்வாளராக பொறுப்பில் இருந்தேன். அப்போது அலங்கியம் காவல்நிலைய குற்ற எண்.604/2021 ச.பி. 294 பி, 307 இதச வழக்கினை அலங்கியம் காவல்நிலைய சிறப்பு உதவி ஆய்வாளர் சிவசுப்பிரமணியம் வழக்கு பதிவு செய்து புலன்விசாரணைக்கு என் பார்வைக்கு வைத்தார். நான் இவ்வழக்கினை புலன் விசாரணைக்கு எடுத்துக் கொண்டு அலங்கியம் காவல்நிலைய சரகம் சிக்கினாபுரம் தண்ணீர்பந்தல் இருந்து அமராவதி ஆற்றுக்குச் செல்லும் தார் ரோட்டில் வாய்க்கால்கரை அருகே சம்பவ இடத்திற்கு 15.30 மணிக்கு சாட்சி நவீன்குமார் அடையாளம் காட்ட ஆஜர் சாட்சிகள் சக்திவேல், மற்றும் ஆண்டவன் ஆகியோர் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டேன். மாதிரி வரைபடம் தயார் செய்தேன். நான் தயாரித்த மாதிரி வரைபடம் அ.சா.ஆ.19. பிறகு சாட்சிகள் மீனாட்சி, நவீன்குமார், விசாலாட்சி, சக்திவேல், ஆண்டவன் ஆகியோரை தனித்தனியாக விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். காயம்பட்டவர் சுப்பிரமணியம் சிகிச்சையில் இருந்த கோவை அரசு மருத்துவமனைக்குச்

சென்று பார்த்தேன். அவர் தீவிர சிகிச்சை பிரிவில் இருந்ததால் அவரை விசாரிக்கவில்லை. 18.10.2021ம் தேதி இவ்வழக்கின் எதிரியை தேடிவந்த நிலையில் மதியம் 13.30 மணிக்கு சிக்கினாபுரம் பஸ்நிறுத்தத்தில் நின்று கொண்டிருந்த எதிரி மோனேஸ் என்பவரை காரணம் கூறி கைது செய்தேன். 13.45மணிக்கு அவர் கொடுத்த ஒப்புதல்வாக்குமூலம் ஆஜர் சாட்சிகள் செல்வராஜ், மற்றும் ஆனந்த் ஆகியோர் முன்னிலையில் பதிவு செய்தேன். ஒப்புதல் வாக்குமூலத்தில் எதிரி என்னை அழைத்துச் சென்றால் தான் கத்தியை மறைத்து வைத்திருந்த இடத்தை அடையாளம் காட்டி கத்தியை எடுத்து ஆஜர்படுத்துகிறேன் என்று கூறி வாக்குமூலம் கொடுத்தார். வாக்குமூலத்தில் எதிரி மற்றும் ஆஜர் சாட்சிகள் கையொப்பம் செய்தார்கள். பிறகு சிக்கினாபுரம் தண்ணீர்பந்தல் கிழக்குத் தெரு எதிரி மோனேஸ் வீட்டிற்கு முன்புள்ள கல்சுவற்றுக்கு இடையேயிருந்து 15 மணிக்கு எதிரி மோனேஸ் எடுத்து கொடுத்த ரெட்பேங்க் என்று எழுதப்பட்ட சில்வர்கலர் பூ போட்ட கத்தி ஒன்றை ஆஜர் சாட்சிகள் செல்வராஜ், ஆனந்த் ஆகியோர் முன்னிலையில் கைப்பற்றினேன். பிறகு சாட்சிகள் செல்வராஜ், ஆனந்த் ஆகியோரை தனித்தனியாக விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். இத்துடன் எனது புலன்விசாரணை முடித்துக் கொண்டேன். வழக்கு கோப்புகளை தாராபுரம் காவல் ஆய்வாளர் மணிகண்டன் வசம் ஒப்படைத்தேன்.

<u>குறுக்கு விசாரணை எதிரி தரப்பில்</u>

16.10.2021 அன்று நான் காவல்நிலைய பணியில் இருந்தேன். அலங்கியம் காவல்நிலையத்திற்கும் தாராபுரம் அரசு மருத்துவமனைக்கும் சுமார் 10 கி.மீ தூரம் இருக்கும். 16.10.2021 இரவு 9.10. மணிக்கு சுப்பிரமணி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு மருத்துவமனையிலிருந்து இண்டிமேசன் பெறப்பட்டது என்றால் சரிதான். அதேதினம் இரவு 9.15 மணிக்கு 1ம் எதிரி மோனேஸ் சிகிச்சைக்கு அனுமதிக்கப்பட்ட இண்டிமேசன் பெறப்பட்டது என்றால் சரிதான். அந்த சமயத்தில் சிறப்பு உதவி ஆய்வாளர் சிவசுப்பிரமணியம் மற்றும் காவலர்கள் இருந்தார்கள் என்றால் சரிதான். சிறப்பு உதவிஆய்வாளர் சிவசுப்பிரமணியம் அன்றைய தேதி காவல்நிலையத்தில் பொறுப்பு அதிகாரியாக இருந்தால் இண்டிமேசன் பெற்று அவரே மருத்துவமனைக்கு சென்று விட்டார். சிறப்பு உதவிஆய்வாளர் சிவசுப்பிரமணியம் மருத்துவமனைக்கு சென்று அன்றைய தேதியில் வாக்குமூலங்கள் எதுவும்

பெறவில்லை. அன்றைய தேதியிலேயே சிறப்பு உதவிஆய்வாளர் சிவசுப்பிரமணியம் இரண்டு இண்டிமேசனை பெற்று இரண்டு வாக்குமூலங்கள் பதிவு செய்துள்ளார் என்றும் அது தற்போது மறைக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. மறுநாள் 17.10.2021 அன்று மீனாட்சி என்பவர் காவல்நிலையம் ஆஜராகி புகார் கொடுத்ததாக கோப்புகளில் உள்ளது. மறுநாள் அ.சா.1 மீனாட்சி புகார் கொடுக்கும் வரையில் எந்த சாட்சிகளையும் விசாரிக்கவில்லை என்றால் சரிதான். 1ம் எதிரி கொடுத்த புகார் சம்பந்தமான வழக்கினை நான் விசாரிக்கவில்லை. உதவி ஆய்வாளர் அந்த வழக்கை விசாரித்தார். 16.10.2021ம் தேதி இரண்டு இண்டிமேசனையும் பெற்று மருத்துவமனைக்கு சென்று வாக்குமூலம் பெறப்பட்டது ன்றும் வெற்றுத்தாளிகளிலும் கையொப்பங்கள் பெறப்பட்டது என்றும் மறுநாள் புகார்தாரரின் வேண்டப்பட்டவர்கள் கொடுத்த அழுத்தம் காரணமாக பொய்யாக சங்கதிகள் கண்டு புகார் தயாரிக்கப்பட்டு வழக்கு பதியப்பட்டது என்றால் சரியல்ல. மருத்துவமனையிலிருந்து வழங்கப்பட்டுள்ள இண்டிமேசன் வழக்கின் விவரங்கள் (வரலாறு) தெரியவில்லை என்றும் வழக்கின் விவரம் ஆர்டிஏ என்று எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான். வாகன விபத்தில் ஏற்படும் காயங்களுக்குத்தான் இதுபோன்ற இண்டிமேசன் வரும் என்றால் சரிதான். புகாரில் காயம்பட்டவர்களை மருத்துவமனைக்கு பைக்கில் அழைத்துச் சென்றார்கள் என்று உள்ளது என்றால் சரிதான். காயம்பட்டவர்களை அழைத்துச் சென்றதாக சொல்லப்படம் பைக்கினை நான் பார்க்கவுமில்லை, கைப்பற்றப்படவும் இல்லை. அந்த பைக் சேதமடைந்துள்ளதால் அதை கைப்பற்றினால் வாகன விபத்தில்தான் காயங்கள் ஏற்பட்டது என்று தெரிந்துவிடும் என்பதால் பைக்கை கைப்பற்றவில்லை என்றால் சரியல்ல. சம்பவ இடத்தில் ரத்தக்கறை எதுவுமில்லை என்றால் சரிதான். காயம்பட்டவரை மருத்துவமனைக்கு அழைத்துச் சென்ற நபர்களிடமிருந்தும், அ.சா.1 உள்ளிட்ட முதல்உதவி செய்ததாக சொல்லும் நபர்களிடமிருந்து ரத்தக்கறை படிந்த துணி எதுவும் கைப்பற்றவில்லை என்றால் சரிதான். கைப்பற்றப்பட்ட கத்தியிலிருந்து ரத்தக்கறை இருந்ததாக கைப்பற்றுதல் மகஜரில் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். நான் கைப்பற்றிய கத்தியில் ரத்தக்கறை இல்லை. மாதிரி வரைபடம் நான் சொன்ன நேரத்தில், சொன்ன இடத்தில் கைப்பற்றவில்லை என்றால் சரியல்ல. 1ம் எதிரி நான்சொன்ன நேரத்தில் , இடத்தில் எந்த ஒப்புதல்வாக்குமூலம் கொடுக்கவில்லை என்றும்

காவல்நிலையத்தில் நான் எழுதி எதிரியிடம் கையெப்பம் பெறப்பட்டது என்றால் சரியல்ல. 1ம் எதிரி என்னிடம் அவர் வீட்டின் முன்பிருந்து கத்தியை எடுத்து கொடுத்தாக நான் சொல்லியுள்ளது தவறு என்றால் சரியல்ல. 19.10.2021 தேதி தாராபுரம் வட்ட ஆய்வாளர் பணிக்கு வந்த பிறகு வழக்கு கோப்புகளை நான் அவரிடம் ஒப்படைத்தேன். அ.சா.1 தனது வாக்குமூலத்தில் தனது கணவரை தேடிக் கொண்டு அவரும் இறந்துபோன சுப்பிரமணியமும் வாய்க்கால்மேடு சென்றதாக சொல்லியுள்ளாரா என்றால் குறிப்பாக காரணம் எதுவும் சொல்லவில்லை. நான் புலன்விசாரணை எதுவும் செய்யவில்லை என்றும் வாக்குமூலம் கொடுத்தாக சொல்வதும் தவறு என்றால் சரியல்ல. பார்வை மகஜரை எழுதியது காவலர் பெயர் தெரியவில்லை. பார்வைமகஜர் மற்றும் புகார் ஒரே நபரால் எழுதப்பட்டது என்றால் சரியல்ல. பார்வை மகஜர் மற்றும் புகார் ஒரே நபரால் எழுதப்பட்டது என்றும் நான் தற்போது வழக்கிற்காக பொய்யாக வெவ்வேறாக உள்ளது என்று மாற்றிக் கூறகிறேன் என்றால் சரியல்ல.

/ஒம்/ பி.ஸ்ரீகுமார்,
3–வது கூடுதல் மாவட்ட நீதிபதி,
தாராபுரம்.